கேபிடல் ஹெல்த்-ன் நிதி உதவிக் கொள்கை
எளிய மொழி சுருக்கம்

கேபிடல் ஹெல்த் நிதி உதவிக் கொள்கை/திட்டமானது (எஃப்ஏபி-FAP) தகுதியான நோயாளிகளுக்கு, கேபிடல் ஹெல்த்-ஆல் வழங்கப்படும் ஓரளவு அல்லது முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்ட சுகாதார சேவைகளை வழங்குவதற்காக உள்ளது. நிதி உதவி கோரும் நோயாளிகள் இந்த திட்டத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்; இது இங்கே சுருக்கமாக விளக்கப்பட்டு உள்ளது.

<u>தகுதியான சேவைகள்</u> - கேபிடல் ஹெல்த்-ஆல் வழங்கப்படும் மற்றும் கேபிடல் ஹெல்த்-ஆல் கட்டணம் வசூலிக்கப்படும் சுகாதார சேவைகள். கேபிடல் ஹெல்த் கட்டணம் வசூலிக்கும் சேவைகளுக்கு மட்டுமே எஃப்.ஏ.பி (FAP) பொருந்தும். மருத்துவர்கள் அல்லது ஆய்வகங்கள் போன்ற பிற வழங்குநர்களால் தனித்தனியாக கட்டணம் வசூலிக்கப்படும் பிற சேவைகள் எஃப்.ஏ.பி-இன் கீழ் தகுதியற்றவை.

<u>தகுதியான நோயாளிகள்</u> - பூர்த்தி செய்யப்பட்ட நிதி உதவி விண்ணப்பத்தை (தொடர்புடைய ஆவணங்கள்/தகவல்கள் உட்பட) சமர்ப்பித்து தகுதியான சேவைகளைப் பெறும் நோயாளிகள் மற்றும் கேபிடல் ஹெல்த்-ஆல் வழங்கப்படும் நிதி உதவிக்கு தகுதியானவர்கள் என தீர்மானிக்கப்பட்டவர்கள்.

<u>விண்ணப்பிப்பது எப்படி</u> – எஃப்.ஏ.பி (FAP) மற்றும் தொடர்புடைய விண்ணப்ப படிவத்தை பின்வருமாறு பெறலாம்/பூர்த்தி செய்யலாம்/சமர்ப்பிக்கலாம்:

1. கேபிடல் ஹெல்த்-ன் பிரதான வெளிநோயாளர் பதிவு மேசை அல்லது காசாளர் அலுவலகத்தில் பெறப்பட்டது.
2. கேபிடல் ஹெல்த் நோயாளி கணக்குத் துறையை 609-394-6023 என்ற எண்ணில் அழைத்து ஆவணங்களை அனுப்பக் கோரவும்.
3. ஆவணங்களை அஞ்சல் மூலம் /அல்லது நேரில் வந்து கோரவும்: 750 பிரன்சுவிக் அவென்யூ, ட்ரெண்டன், NJ 08638-இல் உள்ள கேபிடல் ஹெல்த் பிராந்திய மருத்துவ மையத்தின் பிரதான முகப்பு அறையில் அல்லது ஒன் கேபிடல் வே, பென்னிங்டன், NJ 08534-இல் உள்ள கேபிடல் ஹெல்த் மருத்துவ மையம் - ஹோப்வெல்-ன் பிரதான தளத்தில் அமைந்துள்ள கேபிடல் ஹெல்த் காசாளர் அலுவலகம். (கேபிடல் ஹெல்த் நிதி உதவிக் கொள்கையை இரு இடங்களில் இருந்தும் அஞ்சல் மூலமாக அல்லது நேரில் கேட்டுப் பெறலாம்.)
4. கேபிடல் ஹெல்த்-ன் https://www.capitalhealth.org வலைத்தளத்திலிருந்து ஆவணங்களைப் பதிவிறக்கவும்.
5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை (விண்ணப்ப அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்கள்/தகவல்களுடன்) அஞ்சல் செய்யுங்கள்: கேபிடல் ஹெல்த் நோயாளி கணக்குத் துறை, 750 பிரன்சுவிக் அவென்யூ, ட்ரெண்டன், NJ08638; அல்லது மேலே உள்ள #3 இல் பட்டியலிடப்பட்டுள்ள முகவரிகள் ஏதாவது ஒன்றில் நேரில் வழங்கவும்.

நிதி உதவிக்கான தகுதியை தீர்மானித்தல் - பொதுவாக, ஒரு ஸ்லைடிங் அளவுகோலைப் பயன்படுத்தி, அவர்களின் குடும்ப வருமானம் மத்திய அரசின் கூட்டாட்சி வறுமை வழிகாட்டுதல்களில் (FPG) சொல்லப்பட்டு இருக்கும் தொகைக்கு 200 % சமமாக அல்லது அதற்கும் குறைவாக இருந்து நிதி உதவிக்கு தகுதியுடையவர்கள் தகுதி வாய்ந்த நபர்கள் ஆவர். நிதி உதவிக்கான தகுதி என்பது தகுதியுள்ள நபர்கள் தங்கள் பராமரிப்புக்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பாதுகாப்பு பெற்றவர்கள் மற்றும் காப்பீடு செய்யப்பட்ட நபர்களுக்கு "பொதுவாக கட்டணம் வசூலிக்கப்படும் தொகைகளுக்கு" (ஏ. ஜி. பி- AGB)-க்கு (உள்நாட்டு வருவாய் சேவையால் ஐ. ஆர். சி பிரிவு 501 (ஆர்) இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி, ஏ. ஜி. பி [AGB]) மேல் கட்டணம் வசூலிக்கப்படாது. குடும்ப வருமானம் மற்றும் எஃப். பி. ஜி (FPG) ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே அளிக்கப்படும் நிதி உதவி அளவுகள் பின்வருமாறு:

- குடும்ப வருமானம் எஃப்.பி.ஜி.(FPG)-ன் 0 முதல் 200% வரை
  முழு நிதி உதவி; நோயாளிக்கு $0 கட்டணம்.

- குடும்ப வருமானம் எஃப்.பி.ஜி.(FPG)-ன் 200 முதல் 300% வரை
  ஓரளவு நிதி உதவி; அதிகபட்சமாக நோயாளி செலுத்த வேண்டியது ஏ.ஜி.பி. (AGB).

குறிப்பு: எஃப்.பி.ஜி.(FPG)- க்கு அப்பாற்பட்ட பிற அளவுகோல்களும் பரிசீலிக்கப்படுகின்றன (உ-ம். ரொக்கக் கையிருப்பு அல்லது பணமாக மாற்றப்படக்கூடிய பிற சொத்துகள், மற்றும் மாதாந்திர வீட்டுச் செலவுகளின் அடிப்படையில் மாதாந்திர நிகர வருமானம்), இது முந்தையதில் இருந்து விதிவிலக்குகளுக்கு வழிவகுக்கும். குடும்ப வருமானம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றால், அன்றாட தேவைகள் எப்படி பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதற்கான தகவல்கள் தேவைப்படும். சமர்ப்பிக்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கேபிடல் ஹெல்த் நோயாளி கணக்கு துறை மதிப்பாய்வு செய்து, கேபிடல் ஹெல்த் நிதி உதவிக் கொள்கையின்படி நிதி உதவி தகுதியைத் தீர்மானிக்கிறது. முழுமை பெறாத விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவதில்லை, ஆனால் விண்ணப்பதாரர்களுக்கு இது அறிவிக்கப்பட்டு, விடுபட்டுப் போன ஆவணங்கள்/தகவல்களை வழங்க வாய்ப்பு வழங்கப்படுகிறது.

கேபிடல் ஹெல்த் ஆனது, கேபிடல் ஹெல்த் சேவையைப் பயன்படுத்த வாய்ப்புள்ள தனிநபர்களின் மக்கள்தொகையில், அந்தச் சமூகத்தின் குடியிருப்பாளர்களின் முதன்மை மொழி 5 சதவீதம் அல்லது 1,000, இவற்றில் எது குறைவோ அந்த எண்ணிக்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பட்சத்தில், அதன் எஃப்.ஏ.பி (FAP), எஃப்.ஏ.பி (FAP) விண்ணப்ப படிவம் மற்றும் அதனுடைய எஃப்.ஏ.பி (FAP) இன் எளிய மொழிச் சுருக்கத்தை மற்ற மொழிகளில் மொழிபெயர்க்கிறது. மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புகள் கோரிக்கையின் பேரில் நேரில் கீழேயுள்ள முகவரியிலும் கேபிடல் ஹெல்த்-ன் வலைத்தளத்திலும் கிடைக்கின்றன.

உதவி, ஆதரவு அல்லது கேள்விகளுக்கு தயவுசெய்து அழைக்கவும்: கேபிடல் ஹெல்த் நோயாளி கணக்கு துறை 609-394-6023; நேரில் வருவதென்றால், 750 பிரன்சுவிக் அவென்யூ, டிரென்டன், NJ08638-ல் உள்ள கேபிடல் ஹெல்த் பிராந்திய மருத்துவ மையத்தின் பிரதான முகப்பு அறையில் உள்ள கேபிடல் ஹெல்த்-ன் காசாளர் அலுவலகத்துக்கு திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 1:30 மணி முதல் மாலை 4:30 மணி வரை அல்லது ஒன் கேபிடல் வே, பென்னிங்டன், NJ 08534-ல் உள்ள கேபிடல் ஹெல்த் மருத்துவ மையம்-ஹோப்வெல்-இன் பிரதான தளத்தில் உள்ள கேபிடல் ஹெல்த்-ன் காசாளர் அலுவலகத்துக்கு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை வரலாம்.

கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது 4.26.2018